# யாழ் இந்திய துணைத் தூதரகம்
# யாழ்ப்பாணம்
# ஊடக அறிக்கை

இந்தியாவின் குடியரசு நாளின் 70வது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று (26.01.2020) யாழ் இந்திய துணைத் தூதரகத்தின் குடியரசு நாள் நிகழ்வுகள் காலையில் தூதரகத்திலும் முற்பகல் Tilko hotel லிலும் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. முன்னதாக இந்தியத் துணைத் தூதுவர் பலாலியில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படையின் தன்னுயிரை தியாகம் செய்தவர்களின் நினைவாலயத்தில் யாழ் கட்டளைத் தளபதி ருவான் வணிக சூரியவுடன் இணைந்து மலர் அஞ்சலி செலுத்தினார்.

2. காலை நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. தூதரக அலுவலர்கள் வடமாகாணத்தில் வசிக்கும் இந்திய குடிமக்கள் மற்றும் இந்திய வம்சாவழியினர், இந்திய நலன் விரும்பிகள், ஊடகவியலாளர்கள் என 100ற்கும் மேற்பட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

3. இந்திய நாட்டுப்பண் பாடப்பட்டதைத் தொடர்ந்து இந்திய குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்ட குடியரசு நாள் வாழ்த்துச் செய்தி இந்திய துணைத் தூதுவரால் வாசித்தளிக்கப்பட்டது

4. வரவேற்பு நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணிக்கு Tilko hotel ல் ஆரம்பிக்கப்பட்டது. வடமாகாண ஆளுனர் திருமதி சாள்ஸ், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், யாழ் மாநகரசபை முதல்வர் ஆர்னோல்ட், பாராளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர், முப்படைகளின் அதிகாரிகள், காவல் அதிகாரிகள், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள், இராஜதந்திர குழுக்களின் உறுப்பினர்கள், யாழ் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி, பல்கலைக்கழக பேராசிரியர்கள், அரசியல் தலைவர்கள், இந்திய குடிமக்கள், தூதரக அலுவலர்கள் மற்றும் இந்திய வம்சாவழியினர், ஊடகவியலாளர்கள் என 500ற்கும் மேற்பட்ட பலரும் கலந்து கொண்டனர்.

5. நிகழ்வில் இந்திய துணைத் தூதுவரின் வரவேற்பு உரை இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து வருகை தந்த ஸ்ரீமதி யோகவந்தனா குழுவினரின் வீணை இசைக் கச்சேரியும் ஜெயஸ்ரீ குழுவினரின் கதக் நடனமும் அரங்கேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பாசையூர் சென் அன்ரனிஸ் கலைக்கழகத்தினரின் வீரபாண்டிய கட்ட பொம்மன் நாட்டுக்கூத்தும் இடம் பெற்றது.

6. நிகழ்வுடன் தொடர்புடைய புகைப்படங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

***

**Consulate General of India**
**Jaffna**
***

## PRESS RELEASE

The Consulate General of India celebrated the 70th anniversary of India's Republic Day this morning (26 January, 2020) with Consul General Balachandran and Jaffna Security Forces Commander Major General Ruwan Wanigasooriya paying respects at the IPKF Memorial in Palaly by laying a wreath. Following this, the Consul General hoisted the Indian flag at a function at the Consulate and read out the message of the President of India. Over 100 people, including the Consulate officials and their family members, Indian citizens, persons of Indian origin, friends of India and media participated in the function.

2. The Consulate also organized a cultural programme marking the 70th anniversary of the Republic Day at Tilko Hotel with a Veena recital by Ms. Yoga Vandana Jammalamadaka and group, a Kathak performance by Ms. Jayashree Acharya and group followed by a "Veerapandiya Kaddappomman" Kooththu by artistes from Pasaiyur St. Anthony Cultural Group. Over 500 invited guests including the Northern Province Governor, Members of Parliament, Chairman of the Northern Provincial Council, Jaffna Mayor, Election Commission Member, officers of the Tri Services and Police Forces, senior Government officials, former NPC Ministers and Members, Political and religious leaders, Competent Authority and Professors of the University of Jaffna, Diplomatic Corps, Indian citizens, Persons of Indian Origin, Consulate officials and their families and media participated in the function.

Representative photographs are attached.

****

*Jaffna*
*26 January, 2020*